மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது—

(1) திரு. சி. ரஸ்ஸல் ராஜ்
(2) திரு. வெ. தங்கப்பாண்டியன்
(3) திரு. என். சுந்தரேசத் தேவர்
(4) திரு. டி. சந்தோஷம்
(5) திரு. ஆர். சக்திமோகன்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) சட்டப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று முன்மொழிகிறேன்.

"(1) திரு. க. அறிவழகன்
(2) திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்
(3) திரு. மு. மாசிலாமணி
(4) திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
(5) திரு. எம். எம். பக்கர்"

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

(1) திரு. க. அறிவழகன்
(2) திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்
(3) திரு. மு. மாசிலாமணி
(4) திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்
(5) திரு. எம். எம். பக்கர்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS